**செய்தி வெளியீடு எண்: 513** **நாள்:01.09.2012**

<u>செய்தி வெளியீடு</u>

இயற்கைச் சீற்றங்களால் மக்கள் பாதிக்கப்படும் போது, அவர்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் அதே நேரத்தில், நீண்டகால மறுவாழ்வுப் பணிகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு மிகுந்த அக்கறையுடனும், ஈடுபாட்டுடனும் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், 2011-ஆம் ஆண்டு இறுதியில், ‘தானே புயல்’ தமிழகத்தை தாக்கியதன் விளைவாக, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள கட்டமைப்புகளையும், பயிர்களையும், வீடுகளையும், படகுகளையும் பலத்த சேதத்திற்கு உள்ளாக்கி, அப்பகுதி மக்களின் உடைமைகளையும், வாழ்வாதாரங்களையும் சூறையாடிவிட்டுச் சென்ற நிலையில், புயலின் வேகத்தை மிஞ்சும் அளவுக்கு போர்க்கால அடிப்படையில், மீட்பு, நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இது மட்டுமல்லாமல், தானே புயலால் வீடு இழந்த மக்களின் துயர் துடைக்கும் வண்ணம், அவர்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டித்தரப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் 1,000 கோடி ரூபாய் மதிப்பில் 1,00,000 கான்க்ரீட் வீடுகள் கட்டித்தரப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்து இருந்தார்கள்.

இதன் அடிப்படையில், தானே புயலால் ஏற்பட்ட இழப்புகளை கருத்தில் கொண்டு, கடலூர் மாவட்டத்தில் 90,000 கான்க்ரீட் வீடுகளையும் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் 10,000 கான்கீரீட் வீடுகளையும் கட்டித்தரும் வகையில் 1,000 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேற்காணும் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வீடும் ஒரு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 200 சதுர அடி அளவில் கட்டித் தரப்படும். ஒவ்வொரு வீடும், குடியிருக்கும் அறை, சமையலறை மற்றும் கழிப்பறை ஆகிய வசதிகள் கொண்டதாக இருக்கும்.

அரசின் இந்த நடவடிக்கை தானே புயலால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரினை துடைப்பதில் பெரும் பங்கு வகிக்கும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள்:- 1.9.2012.